**c L k i y¥ng£ i l efuh£Á**

**30.06.2021 « nj Âa rhjhu z ¡ T£l k‹ w ãuš**

| வ. எ ண் | நகர்மன்ற தீர்மான எண் | மன்றப்பொருள் | மன்றத்தின் முடிவு |
|---|---|---|---|
| **1** | 1570 | இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பொதுப்பிரிவு, பொறியர் பிரிவு மற்றும் நகரமைப்புப் பிரிவு தற்காலிகப் பணியிடங்களின் அனுமதி காலம் கீழ்காணும் விபரப்படி முடிவடைகிறது. நகர்மன்றத்தின் அனுமதியுடன் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டு அனுமதி எதிர்நோக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போது அதன் தொடர்ச்சியாக இப்பணியிடங்களுக்கு அனுமதி வரப்பெறாத காலங்களுக்கு பின்னேற்பு அனுமதியும், 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ளவும் உரிய கருத்துருக்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. | அனுமதி வழங்கப் பட்டது |

| வ. எ | பணியிடம் | எண்ணிக்கை | அனுமதி முடிவடையும் நாள் | அனுமதி கோரப்படும் காலம் |
|---|---|---|---|---|
| I.பொதுப்பிரிவு | | | | |
| 1 | தட்டச்சர் | 1 | 30.09.2015 | 01.10.2015 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 2 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 | 30.09.2015 | 01.10.2015 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 3 | வருவாய் உதவியாளர் | 3 | 30.09.2015 | 01.10.2015 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 4 | பண்டகக் காப்பாளர் | 1 | 30.09.2015 | 01.10.2015 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 5 | அலுவலக உதவியாளர் | 2 | 30.09.2015 | 01.10.2015 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| II. பொறியாளர் பிரிவு | | | | |
| 6 | நகராட்சிப் பொறியாளர் நிலை - 2 | 1 | 30.09.2012 | 01.10.2012 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 7 | இழுவை வண்டி ஓட்டுநர் | 2 | 30.09.2012 | 01.10.2012 முதல் 30.09.2021முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 8 | சாலை உருளை ஓட்டுநர் | 1 | 30.09.2012 | 01.10.2012 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |
| 9 | லாரி ஓட்டுநர் | 1 | 30.09.2012 | 01.10.2012 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>10</td><td>லாரி துலக்குநர்</td><td>1</td><td>30.09.2012</td><td>01.10.2012 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி</td></tr>
<tr><td colspan="5">III. நகரமைப்புப் பிரிவு</td></tr>
<tr><td>11</td><td>நகரமைப்பு அலுவலர் நிலை 1</td><td>1</td><td>30.09.2010</td><td>01.10.2010 முதல் 30.09.2021 முடிய பின்னேற்பு அனுமதி மற்றும் 01.10.2021 முதல் நிரந்தரமாக நீடிப்பு அனுமதி</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு :-<br>
1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>
2. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி அவசர அவசியமாக பணியாளர்களை அலுவல் பணிக்கு பயன்படுத்தியதற்கும், அதற்குண்டான செலவினங்களை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண் 6570/2017/சி1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>2</td>
<td>1571</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான கடைகளை மாத வாடகைக்கு விடும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் தொடர்பான அறிவிப்பினை 09.12.2020 அன்று தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.14,175/- ஐ பட்டியல் எண் TPR 2021-0010478 நாள் 09.12.2020ன்படி மேற்படி நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
(ந.க.எண் 10039/2017/அ2)</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>3</td>
<td>1572</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 7ல் சர்வே வார்டு A, பிளாக் 11, நகரளவு எண் 2/2, 2/3, 2/4 அமைந்துள்ள 1.07 ஏக்கர் (அ) 4351 சதுர மீட்டர் பரப்பளவுள்ள இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவாக பிரிப்பதற்கு ஒப்புதல் கோரி திரு.எம்.கைலாசம் மற்றும் எம். ராஜசேகரன் ஆகியோர்கள் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு விண்ணப்பித்ததில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் 08.12.2020ம் தேதிய ந.க.எண்.2906/2020/திமா எண்ணிட்ட கடிதத்தில் மேற்கண்ட இடத்தில் மொத்தம் 22 குடியிருப்பு மனைகளாக ஒதுக்கப்பட்டு ஒப்புதல் வழங்குதல் நிலையில் உள்ளதால் உத்தேச மனைப்பிரிவு சாலையினை தார் சாலையாக அமைத்து சாலைகள் மற்றும் பொது உபயோகம் ஆகியவற்றை நகராட்சிக்கு தானமாக பெற்று அதன் நகலை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக கோப்பு எண். 2906/2020/திமா வரைபடத்தில், பூங்கா பரப்பிற்கு ஈடான வழிகாட்டிமதிப்புத் தொகை ரூ. 12,90,085.50 (அ) முழுத்தொகை ரூ.1291000/- ஐ 15.12.2020ம் தேதியன்று மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டு அசல் மற்றும் நகல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரரால் செலுத்தப்பட்ட ரசீது கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>
மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கடிதம் ந.க.எண். 2906/2020/திமா, நாள். 08.12.2009 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி மனைப்பிரிவு உரிமைதாரரால் மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவின்படி சாலை வசதிகள், குடிநீர் பகிர்மான குழாய் வசதிகள், மழைநீர் வடிகால் வசதிகள் ஆகியவற்றை செய்து,</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் மற்றும் மனுதாரர்களின் விண்ணப்பங்களையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன் மீது நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பு கோரப்பட்டதில் நகராட்சி பொறியாளரால் கீழ்க்கண்ட சான்று வழங்கப்பட்டுள்ளது.<br>1. மேற்கண்ட மனைப்பிரிவில் தார்சாலை, மழைநீர் வடிகால் குடிநீர் பகிர்மான குழாய்<br>நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சிப்பொறியாளர் 22.04.2021 ஆம் தேதியில் சான்று வழங்கியுள்ளார்.<br>2. மின் விளக்கு கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைப்பதற்கான தொகை ரூ.95530/-ம் மனுதாரர் இந்நகராட்சியில் செலுத்தியுள்ளார்.<br>எனவே, மனைப்பிரிவின் பொது உபயோகம் மற்றும் சாலையினை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து மனுதாரரிடமிருந்து நகராட்சிக்கு தானமாக பெற்றுக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 501/2019/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>4</td>
<td>1573</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை அகற்றும் வாகனங்கள் 13 உள்ளது. இவ்வாகனங்களுக்கு ஆயுள் காப்பீட்டுத்தொகை செலுத்துதல், மற்றும் வரிஇனங்கள் செலுத்துதல், Air Pollution தகுதிசான்றிதழ் பெறுதல், ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள ஒரு வருட காலத்திற்கு 01.04.2021 முதல் 30.03.2022 வரை (2021-2022) தோராய செலவினமாக ரூ.2.50/- இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வண்டி எண்</th><th>வாகன பெயர்</th></tr>
<tr><td>1</td><td>TN 78 X 4870</td><td rowspan="3">TIPPER</td></tr>
<tr><td>2.</td><td>TN 78 Y 5781</td></tr>
<tr><td>3.</td><td>TN 41 E 1750</td></tr>
<tr><td>4.</td><td>TN 78 S 0166</td><td rowspan="6">Mini Auto</td></tr>
<tr><td>5</td><td>TN 78 S 0203</td></tr>
<tr><td>6</td><td>TN 78 S 0207</td></tr>
<tr><td>7.</td><td>TN 78 Q 2243</td></tr>
<tr><td>8.</td><td>TN 78 R 6982</td></tr>
<tr><td>9.</td><td>TN 78 Q 2237</td></tr>
<tr><td>10</td><td>TN 41 V 9606</td><td>Jeep</td></tr>
<tr><td>11.</td><td>TN 78 W 4592</td><td rowspan="2">Mosquito Vehicle</td></tr>
<tr><td>12.</td><td>TN 78 W 9720</td></tr>
<tr><td>13</td><td>TN 78 Y 8077</td><td>Front & loader</td></tr>
</table>
(ந.க.எண் 6995/2021/எச்2)</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>5</td>
<td>1574</td>
<td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் கொரோனா-19 தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சியில் கொரோனா தொற்று நோய் ஏற்பட்ட வீ டுகளில் உற்பத்தியாகும் திட, திரவ மற்றும் மருத்துவக்</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>கழிவுகளை கோவைடெக்னோதெர்ம் இண்டஸ்ட்ரீஸ் மூலம் அப்புறப்படுத்த தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்(வடக்கு) தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பொருட்டு இந்நகராட்சியில் கொரோனாவைரஸ் தொற்று (Containment Area) வீ டுகளில் கழிவுகளை அப்புறப்படுத்த டெக்னோதெர்ம் இண்டஸ்ட்ஸ் மாதம் ரூ.20,000/- என வழங்கிய விலைப்புள்ளி வீ தம் நான்கு மாதகாலத்திற்கு ஆகும் செலவினம் ரூ.80,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 350/2021/எச்2)</td><td></td></tr>
<tr><td>6</td><td>1575</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் கொரோனா வைரஸ்நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைக்கு தேவைப்படும் கிருமிநாசினிகள் சோடியம் ஹைப்போ குளோரைடு மற்றும் லைசால் முதலியன விநியோகம் செய்வதற்கு 18.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்த விகிதம் ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங்<br>9/5-1,பஜார் வீ தி திருமலை இல்லம்,<br>அய்யம்பாளையம்,திண்டுக்கல் மாவட்டம்</td><td>ரூ.10,31,320.00</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீதாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர்,சூளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.</td><td>ரூ.98,98,840.00</td></tr>
</table>
மேற்காணும் கிரிமிநாசினிகள் வாங்குவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.10,00,000/- க்கும் இந்நகர்மன்றம் தனது 31.05.2021ம் தேதிய 1568 வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>
பெறப்பட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் Deposit செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீதாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட், பொள்ளாச்சி நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 1514/2021/எச்2)</td><td>அனுமதி வழங்கப் பட்டது</td></tr>
<tr><td>7</td><td>1576</td><td>இந்நகராட்சியில் கொரோனா வைரஸ்நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைக்கு தேவைப்படும் பொதுசுகாதாரப்பொருட்கள் தெர்மல் ஸ்கேனர், ஆக்ஸி மீட்டர், மெகா போன், மாஸ்க், கிளவுஸ் மற்றும் PPE Kit போன்றவைகள் ரூ.5,00,000/- செலவில் விநியோகம் செய்வதற்கு 18.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்த விகிதம் ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீதாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர்,சூளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.</td><td>ரூ.6,64,012.00</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங்<br>9/5-1,பஜார் வீ தி திருமலை இல்லம்,<br>அய்யம்பாளையம்,திண்டுக்கல்</td><td>ரூ.4,93,073.00</td></tr>
</table>
மேற்காணும் சுகாதார பொருட்கள் வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்றம் தனது 31.05.2021ம் தேதிய 1566</td><td>அனுமதி வழங்கப் ப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீபாலாஜி மார்க்கேட்டிங், திண்டுக்கல் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 1512/2021/எச்2)</td><td></td></tr>
<tr><td>8</td><td>1577</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் கொரோனா வைரஸ்நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைக்கு தேவைப்படும் கிருமிநாசினிகள் பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் ஹேண்ட் சானிடைஸ்சர் போன்றவைகள் ரூ.10,00,000/- செலவில் விநியோகம் செய்வதற்கு 18.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்த விகிதம் ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீதாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர்,சூளேஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.</td><td>ரூ.10,02,350.00</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங்<br>9/5-1,பஜார் வீ திதிருமலை இல்லம்,<br>அய்யம்பாளையம்,திண்டுக்கல்</td><td>ரூ.9,72,175.00</td></tr>
</table>
மேற்காணும் கிருமிநாசினிகள் வாங்குவதற்கும் அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் இந்நகர்மன்றம் தனது 31.05.2021ம் தேதிய 1567 வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>எனவே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங், திண்டுக்கல் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 1513/2021/எச்2)</td><td>அனுமதி வழங்கப் ப்பட்டது</td></tr>
<tr><td>9</td><td>1578</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மின்னஞ்சல் கடிதத்தின்படி இந்நகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வரும் CCTV - கேமராக்களின் பராமரிப்பு தினசரி அறிக்கையினை பதிவேடுகள் மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியதின் பேரில், பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது, தற்போது மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள 12 எண்ணிக்கை கேமராக்கள், பேருந்து நிலையத்தில் உள்ள காவல் நிலையத்தில் உள்ள மானிட்டர் மூலமும் அம்மா உணவகத்தில் உள்ள 4 எண்ணிக்கை கேமராக்கள் மேற்படி உணவகத்தில் உள்ள மானிட்டர் மூலமும் கண்காணிக்கப்படுகிறது. மேலும் உரக்கிடங்கில் உள்ள 6 கேமராக்கள் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 8 எண்ணிக்கை கேமராக்கள் ஆகியவை நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் மற்றும் மேலாளர் அறையில் உள்ள மானிட்டர்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. தற்போது மத்திய பேருந்து நிலையம் மற்றும் அம்மா உண்வகத்தில் உள்ள கேமராக்கள் ஆணையாளர் அறையில் உள்ள மானிட்டர் மூலம் கண்காணிக்க ஏதுவாக மேற்படி பகுதியில் உள்ள கேமராக்களுக்கு INTERNET CONNECTION வசதி செய்யும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.20,000/-</td><td>அனுமதிக்க ப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | க்கும் மேற்படி பணியினை கேமராக்களை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் மெசர்ஸ் ஆர்.எஸ்.எம்.அண்டுகோ உடுமலைப்பேட்டை என்ற நிறுவனம் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும். மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1416/2021/இ | |
| **10** | 1579 | இந்நகராட்சி பகுதிகளில் 33 வார்டுகளில் பகிர்மானக்குழாய் அமைப்புகள் 113 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 110 எண்கள் எண்ணிக்கைகள் கொண்ட கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், 81 எண்கள் சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடன் சரிசெய்து சீரான குடிநீர் வழங்குவதுடன், ஆழ்துளை கிணறுகளின் கைப்பம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து இயக்கத்தில் தொடர்ந்து இருக்குமாறு பேணப்பட வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் குடிநீர் கசிவுகளையும், ஆழ்துளை கிணறு பணிகளையும் உடன் அவ்வப்போது மேற்கொள்ள போதிய குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் அதற்குண்டான உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தப்புள்ளி பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு செவ்வனே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சியில் வார்டு எண் : 1 முதல் 16வரை பகுதிகளில் ஏற்படும் மேற்படி குடிநீர் சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1430/2021/இ2) | அனுமதிக்கப்பட்டது |
| **11** | 1580 | இந்நகராட்சி பகுதிகளில் 33 வார்டுகளில் பகிர்மானக்குழாய் அமைப்புகள் 113 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 110 எண்கள் எண்ணிக்கைகள் கொண்ட கைப்பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகள், 81 எண்கள் சிறுமின் விசை பம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளும் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடன் சரிசெய்து சீரான குடிநீர் வழங்குவதுடன், ஆழ்துளை கிணறுகளின் கைப்பம்புகள் மற்றும் சிறுமின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளையும் சரிசெய்து இயக்கத்தில் தொடர்ந்து இருக்குமாறு பேணப்பட வேண்டியுள்ளது. தற்போது இந்நகராட்சியில் குடிநீர் கசிவுகளையும், ஆழ்துளை கிணறு பணிகளையும் உடன் அவ்வப்போது மேற்கொள்ள போதிய குடிநீர் பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் அதற்குண்டான உதிரி பாகங்கள் இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தப்புள்ளி பெற்று பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு செவ்வனே பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே குடிநீர் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சியில் வார்டு எண் : 17 முதல் 33 வரை பகுதிகளில் ஏற்படும் மேற்படி குடிநீர் சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1431/2021/இ2) | அனுமதிக்கப்பட்டது |
| **12** | 1581 | உடுமலைப்பேட்டை நகராட்சி பொறியாளர் பிரிவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவதற்கு E-Token Card பயன்படுத்தப்பட்டு வருகிறது, மேற்கண்ட முறையில் இரண்டு Card-கள் (பொறியாளர், வரைவாளர்) உரிமக்காலாம் 30.06.2021 உடன் | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | முடிவடைவதால் கார்டை புதிப்பிக்க Digital Identity, Trichy என்ற நிறுவனத்திடம் ரூ.3500+3500=7000/-ரூபாயை செலுத்தி புதுப்பிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியை ஒப்பந்ததரார் திருவாளர் M/s RSM & CO உடுமலை அவர்களிடம் ஒப்படைப்பு பணியாக வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 1413/2021/இ1) | |
| **13** | 1582 | உடுமலைப்பேட்டை நகராட்சியின் நூற்றாண்டு விழாவின் வளர்ச்சி திட்டப் பணிகளின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளின் தெருக்களில் 2X120 வாட்ஸ் LED விளக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.5,91,00,000/-க்கு 16.02.2021-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் "M/S SAMIKSHAS AGENCY" NO, 5, Ganapathy Nagar, TV Koil Tiruchirappali 620 005, என்ற நிறுவனம் கலந்து கொண்டு பொறுப்பு தொகையாக (EMD1%) ரூ.5,91,000/-ஐ (DD NO:060889 dt:15.02.2021) வரைவோலைக்கு கொடுத்துள்ளனர். CFC-ல் வங்கி வரைவோலைக்கு ரசீது போடும் போது தவறுதலாக SK SMART SOLUTIONS PRIVATE LTD CHENNAI. என்று தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வைப்பு தொகை பதிவேட்டிலும் மேற்கண்ட நிறுவனத்தின் பெயர் பதிவாகியுள்ளதை "M/S SAMIKSHAS AGENCY" என்று திருத்தம் செய்து, EMD தொகையை மேற்படி நிறுவனத்திற்கு திரும்ப வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(நக.எண் 1987/2021/இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| **14** | 1583 | உடுமலைப்பேட்டை நகராட்சியிலுள்ள கூடுதல் அலுவலகக் கட்டிடத்தில் உள்ள மின் தூக்கி யின் ஆண்டு பராமரிப்பு 23/09/2020 ல் முடிவடைந்து விட்டதால் மீண்டும் ஆகஸ்டு 2021 முதல் ஜீலை 2022 வரை ஓராண்டுக்கு பராமரிப்பு மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ90,000/-க்கு (ரூபாய் தொண்ணூறு ஆயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும் மேற்படி பணியை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>(ந.க.எண் 586/2021/இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| **15** | 1584 | உடுமலைப்பேட்டை நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 4-ல் உள்ள நல்லான் தெரு எக்ஸ்டன்ஷன் பள்ளி மற்றும் பொது மக்கள் உபயோகப்படுத்தி வரும் மேல்நிலை குடிநீர் தொட்டிகள் (Sintex Tank) வைக்கப்பட்டுள்ள கட்டிட அறை கூரை முழுவதும் பழுதடைந்துள்ளதால், மேற்படி தொட்டிகளை வைக்கத் தனியாக இரும்பு ஸ்டாண்டுகள் அமைக்கும் பணிக்கு அதற்காக ரூ, 80, 000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும், மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கோள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>(ந.க.எண் 1499/2021/இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| **16** | 1585 | உடுமலைப்பேட்டை நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 24 வள்ளியம்மாள் காலனியில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.30 இலட்சத்திற்கும் மேற்கண்ட பணியை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>(ந.க.எண் 1499/2021/இ1) | அனுமதிக்க ப்பட்டது |
| **17** | 1586 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் மக்கும் கழிவுகள் 11.9 MT-களும், மக்காத கழிவுகள் 8.10 MT-களும் உற்பத்தியாகின்றன. இந்த 11.9 MT மக்கும் கழிவுகளை மூன்று MCC-ன் மூலமாக ஒரு MCC-க்கு தலா | அனுமதிக்க ப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 4MT என பிரித்து மக்கும் கழிவுகளை அரை உரமாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் நகராட்சியிலுள்ள உணவகங்களிலிருந்து வரும் கழிவுகள், இலைகள் மற்றும் நகரில் உற்பத்தியாகும் மர கிளைகள் முதலியவைகளை சிறு துண்டுகளாக மாற்றும் "ஹைட்டிரிங் மிஷின்" 40எச்.பி (30 கிலோ வாட்ஸ்) மற்றும் 'Incinator' மிஷின் 40எச்.பி (30 கிலோ வாட்ஸ்) ஆகிய இயந்திரங்கள் நகராட்சி உரக்கிடங்கில் பொருத்தப்பட உள்ளதாகவும், மேற்படி இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான மின் வசதிகளை செய்து தருமாறு சுகாதார பிரிவிலிருந்து கோரியுள்ளனர். தற்போது மேற்படி உரக்கிடங்கில், ஏற்கனவே BIO - MINING மெஷின் Each 10 எச்.பி x 5Nos = 50 எச்.பி மற்றும் MCC Unit / No X10 எச்.பி =10 எச்.பி இயந்திரங்கள் (60 எச்.பி X746வாட்ஸ்=45KW) இயக்கப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே பெறப்பட்டுள்ள 60 எச்.பி LT மின்பளுவில் மேற்கண்ட இயந்திரங்களை இயக்குவதற்கு இயலாது என்ற காரணத்தினால், மொத்தமுள்ள 60 எச்.பி+ 40 எச்.பி +40 எச்.பி =140 எச்.பி அளவு கொண்ட இயந்திங்களுக்கு, மேற்படி மின் இணைப்பில் 150 எச்.பி மின் பளு கொண்ட LTCT சர்வீஸ் பெற வேண்டியுள்ளது. அதற்கு தேவையான சர்வீ ஸ்கேபிள்கள், மின் இயந்திர கேபிள்கள், MCCB, LTCT PANEL BOARD மற்றும் Main சுவிட்சுகள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 1587/2021/இ1) | |
| **18** | 1587 | **உடுமலைப்பேட்டை நகராட்சியின் நூற்றாண்டு நிறைவு நினைவை முன்னிட்டு 8 வகையான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள ரூ.48.87 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அவற்றின் பணி எண்:7-ல் நகராட்சி புதிய அலுவலகத்தில் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் மற்றும் நினைவுத்தூண் அமைக்கும் பணிக்கு ரூ.1.00 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் (FAC) அவர்களின் செயல்முறைகள் ஆணையில் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டில் " வரிசை எண்: 65-ல் குறிப்பிடப்பட்டுள்ள, நூற்றாண்டு நினைவுத்தூண் அமைக்கும் பணி (Construction of Centenary Memorial Pillar) கைவினை தொழில் நுட்பம் மிகுந்த பணி என்பதால், அரசாணை (MS) எண்:66 கைத்தறி துறை (G2) நாள்:04.03.2016 மற்றும் அரசாணை (MS) எண்:150 நிதிதுறை நாள்:26.05.2016 ஆகியவற்றில் அனுமதித்த படி, தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனமான " தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் பூம்புகார் [The Tamil Nadu Handicrafts Development Corporation Limited (Poompuhar)] நிறுவனம் மூலம் மேற்கொள்ளும் நோக்கத்தில், மேற்படி நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று ரூ.15.00 இலட்சத்திற்கு LS - Provision - வுடன் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>எனவே மேலே குறிப்பிட்ட ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் " நினைவுத்தூண் அமைக்கும் பணியை '' அரசாணையில் அனுமதி வழங்கியுள்ளபடி தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனமான "தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் லிமிடெட், பூம்புகார், கோவை (The Tamil Nadu Handicrafts Development Corporation Limited) நிறுவனத்திற்கு நேரடியாக ஒப்படைப்பு பணியாக வேலை உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 1987/2020/இ1)** | அனுமதிக்கப்பட்டது |
| **19** | 1588 | உடுமலைப்பேட்டை நகராட்சியின் நூற்றாண்டு நிறைவு நினைவை முன்னிட்டு 8 வகையான வளர்ச்சிப் | அனுமதி |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
பணிகள் மேற்கொள்ள ரூ.48.87 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அவற்றில் பணி எண்(8)ல் நகராட்சிக்குச் சொந்தமான 1) அண்ணா பூங்கா 2) GTV நகர் 3) ஸ்டேட் பேங்க் காலனி 4) சாத்விக் நகர் மற்றும் 5) ராஜலட்சுமி நகர், ஆகிய பகுதிகளிலுள்ள பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் சிறுவர் விளையாட்டு சாதனங்கள் அமைக்கும் பணிக்கு ரூ.1.42 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் முழு கூடுதல் பொறுப்பு அவர்களின் செயல் முறைகள் ஆணையில் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் கைவினை தொழில் நுட்பம் மிகுந்த பணிகள் என்பதால் அரசாணை (MS) எண்:66 கைத்தறி துறை (G2) நாள்:04.03.2016 மற்றும் அரசாணை (MS) எண்:150 நிதிதுறை நாள்:26.05.2016 அங்கீகரித்துள்ளபடி, தமிழ்நாடு அரசை சார்ந்த நிறுவனமான தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சி கழகம் லிமிடெட் பூம்புகார் கோவை [The Tamil Nadu Handicrafts Development Corporation Limited (Poompuhar)] நிறுவனம் மூலம் மேற்கொள்ளும் நோக்கத்தில் மேற்படி நிறுவனத்திடம் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளி பெற்று LS Provision –வுடன் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>
<u>பணி விபரங்கள்:</u>
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணி விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>தொழிநுட்ப அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டில் வரிசை எண்</th><th>ரேட் (ஒன்றுக்கு)</th><th><u>தொகை (ரூபாயில்)</u></th></tr>
<tr><td>1</td><td>2step stone water Fountain on top Flower carved at Anna Park</td><td>1</td><td>55</td><td>575000/-</td><td>575000/-</td></tr>
<tr><td>2</td><td>2 Step stone water Fountain designed with intricately carved at GTV Lay out</td><td>1</td><td>55</td><td>500000/-</td><td>500000/-</td></tr>
<tr><td>3</td><td>1 Step Water Fountain with top ball with big base square type at Rajalakshmi Nager</td><td>1</td><td>55</td><td>325000/-</td><td>325000/-</td></tr>
<tr><td>4</td><td>1 Step Water Fountain with top ball with base round type at Sathvik Nager</td><td>1</td><td>55</td><td>325000/-</td><td>325000/-</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>4</td><td>-</td><td>-</td><td>1725000/-</td></tr>
</table>
எனவே மேலே குறிப்பிட்ட பணிகளை, அரசாணைகளில் அனுமதி வழங்கியுள்ளபடி தமிழ்நாடு அரசு சார்ந்த நிறுவனமான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகம் லிமிடெட், கோவை பூம்புகார் (The Tamil Nadu Handicrafts Development Corporation Limited) நிறுவனத்திற்கு நேரடியாக ஒப்படைப்பு பணியாக வேலை உத்திரவு வழங்கி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
(ந.க.எண்1987/2020/இ1)
</td>
<td>வழங்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>20</td>
<td>1589</td>
<td>
உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் இரண்டு வாகன ஓட்டநர்கள் பணிபுரிவதற்கு 23.06.2021 அன்று பெறப்பட்டஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் & முகவரி</th><th>ஒப்பந்தவிலை விகிதம் (ஒரு நாளைக்கு ரூபாய்)</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் ஆர்.எஸ்.எம் அன் கோ., 1ஏ, யூனியன் ஆபீஸ் ரோடு,உடுமலைப்பேட்டை</td><td>ரூ.1170/-</td></tr>
<tr><td>2.</td><td>மெசர்ஸ் ராஜ் அன் கோ., 22,கல்யாணி நகர்பழனி ரோடு, உடுமலைப்பேட்டை</td><td>ரூ.1180/-</td></tr>
</table>
மேற்காணும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணிகள் மேற்கொள்வதற்கும் ,உத்தேச செலவுத்தொகை ரூ.4.25% இலட்சத்திற்கு இந்நகர்மன்றம் தனது 31.05.2021ம் தேதி 1549வது எண் தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் ஆர்.எஸ்.எம் அன் கோ., உடுமலை நிறுவனத்தினர் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதாலும், அதனை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு பணிஉத்திரவு
</td>
<td>அனுமதி வழங்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 1352/2021/எச்2)</td><td></td></tr>
<tr><td>21</td><td>1590</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை அகற்றும் வாகனம் டி.என்.41 Y 8077க்கு தகுதிச்சான்று பெறுவதற்குரிய பழுது வேலைகளை மேற்கொள்வதற்கு 16.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் & முகவரி</th><th>ஒப்பந்த விகிதம் ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்<br>222, பழனி ரோடு,உடுமலைப்பேட்டை</td><td>ரூ.34560/-</td></tr>
<tr><td>2.</td><td>P.B.ஷெரீப் ஆட்டோடீசல் ஒர்க்ஸ்,<br>69,ஏபிடி ரோடு, பொள்ளாச்சி ரோடு,<br>பொள்ளாச்சி</td><td>ரூ.35150/-</td></tr>
</table>
மேற்காணும் வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கும் தகுதிசான்று பெறுவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.35000/-க்கும்,இந்நகர்மன்றம் தனது 31.05.2021ம் தேதிய 1538வது தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், உடுமலை என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்படி நிறுவனத்திற்குபணிஉத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 0817/2021/எச்2)</td><td>அனுமதி வழங்கப் பட்டது</td></tr>
<tr><td>22</td><td>1591</td><td>உடுமலைப்பேட்டை நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகளை அகற்றும் வாகனம் டி.என்.41R 6982க்கு தகுதிச்சான்று பெறுவதற்குரிய பழுது வேலைகளை மேற்கொள்வதற்கு 16.06.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் & முகவரி</th><th>ஒப்பந்த விகிதம் ரூபாய்</th></tr>
<tr><td>1.</td><td>மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்<br>222, பழனி ரோடு,உடுமலைப்பேட்டை</td><td>ரூ.34,900/-</td></tr>
<tr><td>2.</td><td>P.B.ஷெரீப் ஆட்டோடீசல் ஒர்க்ஸ்,<br>69,ஏபிடி ரோடு, பொள்ளாச்சி ரோடு,பொள்ளாச்சி</td><td>ரூ.35,900/-</td></tr>
</table>
மேற்காணும் வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்வதற்கும் தகுதிசான்று பெறுவதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.35000/-க்கும்,இந்நகர்மன்றம் தனது 31.05.2021ம் தேதிய 1538வது தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கியுள்ளது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர்களும் வைப்புத்தொகை செலுத்தியுள்ளார்கள். இருப்பினும் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், உடுமலை என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மேற்படி நிறுவனத்திற்கு பணிஉத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின்</td><td>அனுமதி வழங்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 1129/2021/எச்2) | |
| **23** | 1592 | அ) நகராட்சிக்குச் சொந்தமான கடைகள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை அரசாணை (நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநிவ) துறை நாள் 03.07.2007ன்படியும், அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் அரசாணை (நிலை) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநிவ) துறை நாள் 19.09.2008ன்படியும் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.<br>தற்போது அவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டுள்ள இனங்களில் 31.03.2021உடன் குத்தகை காலம் முடிவடையும் இனங்களுக்கு தேர்தல் நடத்தை விதிகளின்படி குத்தகைக்கு விட ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் எடுக்க இயலாது என்பதால் , 06.04.2021 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நகராட்சிகளில் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை தேர்தல் நடத்தை விதிகள் முடிவுறும் காலம் வரை நிறுத்தி வைக்கவும், அவ்வினங்களை தற்போது ஏலம் நடத்தி வரும் குத்தகைதாரர்களே தொடர்ந்து நடத்தவும், அவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலித்து வரும் தொகையினை வசூலிக்குமாறும், முந்தைய குத்தகைதாரர்கள் குத்தகை இனங்களை தொடர்ந்து நடத்த விரும்பாத இனங்களில், துறை மூலம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.03.2021ம் தேதிய ந.க.எண்5304/2021/ஆர்2 எண்ணுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் சுற்றறிக்கை நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>ஆ) மேலே தெரிவிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான ராஜேந்திரா ரோடு கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை 01.04.2021 முதல் 30.06.2021 முடிய மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே நடத்தி வரும் திரு.விஜயகுமார், குத்தகைதாரருக்கு நீட்டிப்பு செய்து, தொடர்ந்து நடத்தியும், 2020-21ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.6,74,730/-ல் மூன்று மாதத்திற்கான தொகை ரூ.1,68,683/- மட்டும் கணினியில் கேட்பு எழுப்பவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>2) நகராட்சி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமத்தை ஏற்கனவே நடத்தி வரும் குத்தகைதாரர் 01.04.2021 முதல் 30.06.2021 முடிய தொடர்நது நடத்திட விரும்பாததால், 01.04.2021 முதல் துறை மூலம் வசூலித்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண் 8510/2017/அ2) | அனுமதிக்கப்பட்டது |
| **24** | 1593 | **இந்நகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-21ன் கீழ் இராஜேந்திரா சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையை மேம்படுத்துதல் பணிக்கு கட்டிட வடிவமைப்பு மற்றம் வரைபடங்களுடன் (Technical design and drawing) விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கைத் தயார் செய்து வழங்க கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்யவும் அதற்கான செலவினத்தை முதலில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொண்டு பின்னர் மேற்படி திட்டநிதி மானய்ம் வரப்பெற்றபின்** | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வருவாய் நிதிக்கு ஈடுசெய்து கொள்ளவும் நகர்மன்றத்தீர்மான 1491 நாள் 25-02-2021-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு கலந்தாலோசகர் நியமனம் செய்வதற்கான செலவு தொகை இதற்கான மதிப்பீட்டிலும் L.S.இனமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br><br>தற்போது அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதி ரூ.48.87 கோடி மான்யமாக இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே கலந்தாலோசகர் [Consultant] நியமனம் செய்து கட்டிட வடிவமைப்பு மற்றும் வரைபடங்களுடன் (Technical design and drawing)பணிகளுடன் விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து வழங்கும் பணிக்கான செலவு தொகை ரூ.8.00 இலட்சத்தை இத்திட்ட நிதியில் இருந்தோ அல்லது இத்திட்ட நிதியின் கீழ் பெறப்படும் வட்டித்தொகையிலிருந்தோ செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1987/2020/இ1) | |
| **25** | 1594 | இந்நகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-21 ன் கீழ் தங்கம்மாள் ஓடை பகுதியல் நடைபாதை அமைத்தல் மற்றும் தடுப்புச்சுவர் கட்டும் பணிக்கு Surveying மற்றும் Levelling செய்து விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கைத் தயார் செய்து வழங்க கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்யவும் அதற்கான செலவினத்தை முதலில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொண்டு பின்னர் மேற்படி திட்டநிதி மான்யம் வரப்பெற்றபின் வருவாய் நிதிக்கு ஈடுசெய்து கொள்ளவும் நகர்மன்றத்தீர்மான எண் 1495 நாள் 25-02-2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு கலந்தாலோசகர் நியமனம் செய்வதற்கான செலவு தொகை இதற்கான மதிப்பீட்டிலும் L.S.இனமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br><br>தற்போது அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதி ரூ.48.87 கோடி மான்யமாக இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே கலந்தாலோசகர் [Consultant] நியமனம் செய்து Surveying மற்றும் Levelling பணிகளுடன் விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து வழங்கும் பணிக்கான செலவு தொகை ரூ.9.92 இலட்சத்தை இத்திட்ட நிதியில் இருந்தோ அல்லது இத்திட்ட நிதியின் கீழ் பெறப்படும் வட்டித்தொகையிலிருந்தோ செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1987/2020/இ1) | அனுமதிக்கப்பட்டது |
| **26** | 1595 | இந்நகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-21 ன் கீழ் பொள்ளாச்சி பழனி செல்லும் சாலையிலுள்ள பேருந்து நிலையம் அருகில் கூடுதல் பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு கட்டிட வடிவமைப்பு மற்றம் வரைபடங்களுடன் (Technical design and drawing)விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கைத் தயார் செய்து வழங்க கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்யவும் அதற்கான செலவினத்தை முதலில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொண்டு பின்னர் மேற்படி திட்டநிதி மான்யம் வரப்பெற்றபின் வருவாய் நிதிக்கு ஈடுசெய்து கொள்ளவும் நகர்மன்றத்தீர்மான எண் 1490 நாள் 25-02-2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு கலந்தாலோசகர் நியமனம் செய்வதற்கான செலவு தொகை இதற்கான மதிப்பீட்டிலும் L.S.இனமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | தற்போது அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதி ரூ.48.87 கோடி மான்யமாக இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே கலந்தாலோசகர் [Consultant] நியமனம் செய்து கட்டிட வடிவமைப்பு மற்றும் வரைபடங்களுடன் (Technical design and drawing) பணிகளுடன் விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து வழங்கும் பணிக்கான செலவு தொகை ரூ.5.00 இலட்சத்தை இத்திட்ட நிதியில் இருந்தோ அல்லது இத்திட்ட நிதியின் கீழ் பெறப்படும் வட்டித்தொகையிலிருந்தோ செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1987/2020/இ1) | |
| **27** | 1596 | இந்நகராட்சியில் நூற்றாண்டு விழா திட்டம் 2020-21 ன் கீழ் கழுத்தறுத்தான் பள்ளம் பகுதியில் தடுப்புச் சுவர்கட்டும் பணிக்கு Surveying மற்றும் Levelling செய்து விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கைத் தயார் செய்து வழங்க கலந்தாலோசகர் (Consultant) நியமனம் செய்யவும் அதற்கான செலவினத்தை முதலில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொண்டு பின்னர் மேற்படி திட்டநிதி மான்யம் வரப்பெற்றபின் வருவாய் நிதிக்கு ஈடுசெய்து கொள்ளவும் நகர்மன்றத்தீர்மான எண் 1494 நாள் 25-02-2021ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு கலந்தாலோசகர் நியமனம் செய்வதற்கான செலவு தொகை இதற்கான மதிப்பீட்டிலும் L.S.இனமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.<br><br>தற்போது அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதி ரூ.48.87 கோடி மான்யமாக இந்நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது. எனவே கலந்தாலோசகர் [Consultant] நியமனம் செய்து Surveying மற்றும் Levelling பணிகளுடன் விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து வழங்கும் பணிக்கான செலவு தொகை ரூ.9.92 இலட்சத்தை இத்திட்ட நிதியில் இருந்தோ அல்லது இத்திட்ட நிதியின் கீழ் பெறப்படும் வட்டித்தொகையிலிருந்தோ செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>(ந.க.எண் 1987/2020/இ1) | அனுமதிக்கப் பட்டது |

| | | | |
|---|---|---|---|
| **28** | 1597 | உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம் எண்.1 y¦ r®nt th®L E, Ãsh¡ 5. efusÎ v©. 89ல் பழனியம்மாள் லேஅவுட் பகுதியில் **Reserved for Public Purpose**ல் திரு. எல்லப்பன் என்பவரால் கல்யாண மண்டப ஒதுக்கீடு பகுதியாக திட்டமாற்றம் செய்யப்பட்டுள்ள பகுதியில், தற்போது திரு. கண்ணன் என்பவரால் குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தர கோரி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருப்பூர் (மற்றும்) ஆணையாளர் வழியாக பிரேரணை அனுப்ப மனு செய்துள்ளார்.<br>மேற்படி இடம் ஆய்வு செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண். **TP/DTP No. 33/66**ல் " **Reserved for Public Purpose** " என ஒதுக்கப்பட்டுள்ளது.<br>1966ஆம் ஆண்டு பழனியம்மாள் லேஅவுட் கோப்பில் மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் **Reserved to Public Purpose** vd¦W திருப்பூர் மாவட்ட அரசிதழில் 60 சென்ட் இடம் நகராட்சி பராமரிப்பிற்கும், 7 சென்ட் கோவில் இடத்திற்கும், 33 சென்ட் கல்யாண மண்டப பொது ஒதுக்கீடாகவும் பிரித்து 27.07.2011 M« njÂæy¦ மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.<br>மேலும், மேற்படி **Reserved to Public Purpose**ல் 33 சென்ட் ஒரு பகுதியினை நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை சிறப்பு ஆணையாளர் கடித நகஎண். 33477/98 நாள். 17.10.2000 ல் திரு. எல்லப்gன் என்பவருக்கு கல்யாண மண்டபம் ஒதுக்கீடு பகுதியாக திட்டமாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. 7 சென்ட் கோயில் பகுதி தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது<br>தற்போது எல்லப்பன் என்பவரால் கல்யாண மண்டபம் திட்டமாற்றம் செய்யப்பட்ட பொது ஒதுக்கீடு இடத்திy¦ 33 சென்ட் பகுதியில் நான்கு உரிமையாளர்கள் 1. திரு. சுந்தரராஜன், 2. திருமதி. வளர்மதி, 3. திருமதி. சத்யபிரபா, 4. திருமதி.ஈஸ்வரி ஆகியோர் திரு. கண்ணன் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் மூலம் அவர்களின் முதல்வராக நியமித்துள்ளார்.<br>மேற்படி நான்கு உரிமையாளர்களின் பெயரும் ச®nt th®L E, Ash¡ 5. efusÎ v©. 89ல் ரயத்துவாரி மனை என்றும், 1. கிருஷ்ணசாமி மகன் சுந்தரராஜன்,<br>2, தங்கவேல் மனைவி வளர்மதி , 3, கண்ணன் மனைவி சத்யபிரபா 4. சுந்தரராஜன் மனைவி ஈஸ்வரி ஆகியோர்களின் பெயரில் 09.06.2021 TSLRல் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>ஏற்கனவே, திரு. எல்லப்பன் என்பவரால் திட்டமாற்றம் செய்துள்ள கல்யாண மண்டபம் பொது ஒதுக்கீடு பகுதியினை திரு. கண்ணன் என்பவரின் குடியிருப்பு நில உபயோகமாக திட்டமாற்றம் செய்ய 32.72 சென்ட் இடத்திற்கு உரிய ஆவணங்களுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் வழியாக பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண் 978/2021/எப்1) | அனுமதிக்கப் பட்டது |

(x¥g«) தே கிருஷ்ணமூர்த்தி,
M i z ahs®/ j å mY t y®

**M i z ahs®**
**c L k i y¥ng£ i l efuh£Á**